بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுஉல்லாஹுஉத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் 28/06/2024 அன்று U.K - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுஉமுஆ பேருரையின் சுருக்கம்**

## பனூ நளீர் போரின் சூழ்நிலைகள், சம்பவங்கள் பற்றிய குறிப்பு

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ۔ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔

بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۱﴾ اَلۡحَمۡدُ لِلّٰہِ رَبِّ الۡعٰلَمِیۡنَ ﴿۲﴾ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۳﴾ مٰلِکِ یَوۡمِ الدِّیۡنِ ﴿۴﴾ اِیَّاکَ نَعۡبُدُ وَ اِیَّاکَ نَسۡتَعِیۡنُ ﴿۵﴾ اِہۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِیۡمَ ﴿۶﴾ صِرَاطَ الَّذِیۡنَ اَنۡعَمۡتَ عَلَیۡہِمۡ ۬ۙ غَیۡرِ الۡمَغۡضُوۡبِ عَلَیۡہِمۡ وَ لَا الضَّآلِّیۡنَ ﴿۷﴾

பனூ நளீருடன் நடைபெற்ற போர் பற்றி கூறப்பட்டு வந்தது. இதைக் குறித்து ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் சாஹிப் (ரலி) அவர்கள் சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூலில் இவ்வாறு எழுதியுள்ளார்கள்:

பெருமானார் (ஸல்) அவர்கள் பனூ நளீருடைய கோட்டைகளை நோக்கி புறப்பட்டபோது தமக்குப் பின்னால் மதீனாவில் இருந்தவர்களுக்கு இமாமுஸ் ஸலாத்தாக அப்துல்லாஹ் பின் மக்தூம் (ரலி) அவர்களை நியமித்தார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள் சஹாபிகளின் ஒரு குழுவை அழைத்துக் கொண்டு மதீனாவில் இருந்து புறப்பட்டுச் சென்று பனூ நளீருடைய குடியிருப்பை முற்றுகையிட்டார்கள். அந்தக் காலத்து போர் முறைப்படி பனூ நளீர் கோட்டையை அடைத்துக் கொண்டு உள்ளே இருந்து விட்டார்கள். அநேகமாக அந்த சந்தர்ப்பத்தில்தான் அப்துல்லாஹ் பின் உபய் பின் சலூல் மற்றும் இதர மதீனத்து முனாஃபிக்கள் பனூ நளீருடைய தலைவர்களுக்கு, நீங்கள் முஸ்லிம்களை கண்டு ஒருபோதும் அடங்கி விட வேண்டாம். நாங்கள் உங்களுடன் இருப்போம். உங்கள் சார்பாக போரிடுவோம் என்று கூறி அனுப்பினார்கள். ஆனால் உண்மையிலேயே போர் ஆரம்பித்தபோது பெருமானார் (ஸல்) அவர்களுக்கு எதிராக பகிரங்கமான முறையில் மைதானத்தில் இறங்குவதற்கு அந்த முனாஃபிக்களுக்கு துணிவு இருக்கவில்லை. அதேபோன்று முஸ்லிம்களுக்கு எதிராக மைதானத்திற்கு வந்து பகிரங்கமான முறையில் பனூ நளீருக்கு உதவி செய்வதற்கு பனூ குரைஸாவுக்கும் துணிவு இருக்கவில்லை.

எவ்வாறிருப்பினும், முஸ்லிம்களுக்கெதிராக திறந்தவெளியில் பனூ நளீர் போருக்கு வரவில்லை. கோட்டையை அடைத்துக் கொண்டு உள்ளே இருந்து விட்டார்கள். அந்த காலத்தைப் பொருத்தவரை அக்கோட்டைகள் மிகவும் உறுதி வாய்ந்ததாக இருந்தன. ஆகவே முஸ்லிம்கள் அவர்களை ஒன்றும் செய்ய முடியாது; இறுதியில் நெருக்கடிக்கு ஆளாகி முற்றுகையை விட்டு விடுவார்கள் என்று அவர்களுக்கு நிம்மதி இருந்தது. எவ்வாறிருப்பினும், பெருமானார் (ஸல்) அவர்கள் முற்றுகையை தொடர்ந்தார்கள். இந்த முற்றுகை 6 நாள் இருந்தது என்றும் இன்னோர் அறிவிப்பின் அடிப்படையில் 15 நாள் இருந்தது என்றும் கூறப்படுகிறது. இதைத் தவிர 20 நாள், 23 நாள் என்ற கூற்றுகளும் அறிவிக்கப்பட்டுள்ளன.

முற்றுகையின்போது சில நாட்கள் கழிந்த பிறகு பெருமானார் (ஸல்) அவர்கள் கோட்டைக்கு வெளியே இருந்த பேரீத்த மரங்களுள் சிலவற்றை வெட்டுமாறு கட்டளையிட்டார்கள். அவை லீனா எனும் வகையைச்சார்ந்த பேரீத்த மரங்கள் ஆகும். மனிதர்களின் உணவாக அவை பயன்படுவது கிடையாது. யூதர்கள் கோட்டைகளின்

மதில்களுக்கு மேலே நின்று கொண்டு அம்புகளையும் கற்களையும் எறிந்து கொண்டிருந்தார்கள். இந்த மரங்கள் அவர்களை பாதுகாத்து வந்தன. அவை அவர்களின் பதுங்குமிடமாக இருந்தன. ஆகவே, அந்த மரங்கள் வெட்டப்படுவதைக் கண்டு பனூ நஸீர் தாக்கத்திற்குள்ளாகி விட வேண்டும்; தம் கோட்டைகளின் கதவுகளைத் திறந்து விட வேண்டும். இவ்வாறு சில மரங்களுடைய நஷ்டத்திற்குப் பதிலாக பல மனித உயிர்கள் வீணாவது பாதுகாக்கப்பட வேண்டும்; நாட்டில் கூச்சல் குழப்பம் நிறுத்தப்பட வேண்டும் என்பதற்காக பெருமானார் (ஸல்) அவர்கள் அம்மரங்களை வெட்டுமாறு கட்டளையிட்டார்கள்.

அல்லாஹ்வுடைய சிறப்பான இல்ஹாமின் கீழ் பெருமானார் (ஸல்) அவர்கள் இந்த மரங்களை வெட்டுவதற்கான கட்டளையிட்டார்கள் என்பது தெரிய வருகிறது. ஆகவே இந்த திட்டம் வேலை செய்தது. ஆறு மரங்கள்தான் வெட்டப்பட்டிருக்கும். முஸ்லிம்கள் தம்முடைய அனைத்து மரங்களையும் - அதில் பழம் தரக்கூடிய மரங்களும் இருந்தன - வெட்டி விடுவார்களோ என்று எண்ணி பனூ நஸீர் அழுது புலம்ப ஆரம்பித்தனர். பொதுவான சூழ்நிலையில் எதிரியுடைய பழம் தரும் மரங்களை வெட்டுவதற்கு முஸ்லிம்களுக்கு அனுமதி கிடையாது. எவ்வாறிருப்பினும், பனு நஸீர் தாக்கத்திற்குள்ளாகி இங்கிருந்து தங்களுடைய பொருட்களை எடுத்துக் கொண்டு அமைதியுடன் செல்ல தங்களுக்கு அனுமதிக்க வேண்டும் என்ற நிபந்தனையின் அடிப்படையில் கோட்டையினுடைய கதவுகளை திறந்து விட்டார்கள்.

**யூதர்களின் இயலாமை மற்றும் நாடு கடத்தப்படுவதற்கு அவர்களே கோரிக்கை வைத்தது தொடர்பாக மேற்கொண்டு இவ்வாறு எழுதப்பட்டுள்ளது;** முஸ்லிம்கள் இந்த யூத கோத்திரத்தினருடைய மரங்களை எரித்து அவர்களை இன்னும் பதற்றத்தில் ஆழ்த்தி விட்டனர். அல்லாஹ் அவர்களின் உள்ளங்களில் அச்சத்தை நிரப்பி விட்டான். அவர்கள் ஆயுதங்களை கீழே போடுவதற்கு ஒப்புக் கொண்டனர். நாடு கடத்தப்படுவதற்கு அவர்கள் கோரிக்கை வைத்தபோது பெருமானார் (ஸல்) அவர்கள் அம்மக்களிடம், நீங்கள் மதீனாவை விட்டு வெளியேறி விடுங்கள்; உங்களுடைய உயிர்கள் பாதுகாப்பாக இருக்கும். உங்களுடைய ஒட்டகங்கள் என்னென்ன பொருட்களை சுமக்க முடியுமோ அவற்றையும் கொண்டு செல்லுங்கள்; போர் ஆயுதங்களை தவிர என்று கட்டளையிட்டார்கள்.

**பெருமானார் (ஸல்) அவர்கள் மீது அவதூறு சுமத்துபவர்கள் இதைப் பார்க்க வேண்டும்.** பெருமானார் (ஸல்) அவர்கள் அந்த யூதர்களை தம் பிடிக்குள் கொண்டு வந்து விட்டார்கள். அந்த யூதர்களும் கூட எப்படிப்பட்டவர்கள் என்றால், அவர்கள் தொடர்ச்சியாக ஒப்பந்தங்களை முறித்துக் கொண்டிருந்தார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள் மதீனாவின் ஆட்சியாளராக இருந்தபோதிலும் அம்மக்கள் அன்னாரைக் கொலை செய்வதற்கு பலமுறை சூழ்ச்சிகளையும் முயற்சிகளையும் செய்திருந்தார்கள். ஆயுதங்கள் ஏந்தி முறையாக கிளர்ச்சியில் இறங்கி இருந்தார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள் சமாதான ஒப்பந்தம் செய்ய முன்வந்தபோது அதை மிகவும் ஆணவமான முறையில் அவர்கள் மறுத்து விடக்கூடியவர்களாக இருந்தார்கள். இப்பொழுது இறுதியில் பெருமானார் (ஸல்) அவர்கள் அந்த மக்களை தம் பிடிக்குள் கொண்டு வந்த போது அவர்களுக்கு எந்த அளவு கடினத்திலும் கடினமான தண்டனையை கொடுக்க முடியுமோ அதைக் கொடுப்பது ஆகுமானதாக இருந்தது. ஆனால் பெருமானார் (ஸல்) அவர்களின் அமைதி மற்றும் சமாதானத்தை விரும்பும் தன்மை, மனிதம் மீது கருணை, பரிவு காட்டுதல் ஆகியவற்றின் வியத்தகு மகிமை கொண்ட பண்பு வெளிப்படுகின்றது. அன்னார் அந்த மக்களுக்கு அங்கிருந்து அமைதியுடன் செல்வதற்கு அனுமதி கொடுத்து விட்டார்கள். அன்னாருடைய கருணை மற்றும் தயாள குணத்தின் நிலை எவ்வாறானதாக இருந்தது என்றால், போர் தளவாடங்கள் மற்றும் ஆயுதங்களைத் தவிர எந்த பொருட்களை எல்லாம் கொண்டு செல்ல விரும்புகிறார்களோ அவற்றை கொண்டு செல்லவும் அனுமதி கொடுத்தார்கள்.

பெருமானார் (ஸல்) அவர்கள் பனூ நளீரை நாடு கடத்துவதற்கு நான்கு நிபந்தனைகளை நிர்ணயித்தார்கள். 1. பனூ நளீரைச் சார்ந்த யூதர்கள் மதீனாவின் பகுதியை விட்டு எங்கு செல்ல விரும்புகிறார்களோ அங்கு செல்லலாம். 2. யூதர்கள் மதீனாவை விட்டு செல்லும்போது முழுமையான முறையில் ஆயுதங்கள் இன்றி செல்ல வேண்டும். 3. எந்த அளவு தம் பொருட்களை தம் ஒட்டகங்கள் மீது கொண்டு செல்ல முடியுமோ கொண்டு செல்லலாம். 4. யூதர்கள் தம் செல்வங்களை எடுத்துச் சென்ற பிறகு எஞ்சியுள்ள பொருட்கள் - அது அசையும் சொத்துக்களாக இருந்தாலும் சரி! அசையா சொத்துக்களாக இருந்தாலும் சரி! அவை முஸ்லிம்களுக்கு சொந்தமானவையாக ஆகிவிடும்.

**ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் சாஹிப் (ரலி) அவர்கள் யூதர்கள் நாடு கடத்தப்பட்ட நிலையைக் குறித்து இவ்வாறு எழுதியுள்ளார்கள்:** பனூ நளீர் தம் கைகளால் தம் வீடுகளை இடித்து தள்ளி அதனுடைய கதவுகள், ஜன்னல்கள், கதவு நிலைகள் போன்ற மரச்சாமான்களை பெயர்த்து எடுத்துச் சென்றனர். அவர்கள் நாடு துறந்து சென்ற பிறகு அந்த வீடுகளில் முஸ்லிம்கள் குடியிருக்க முடியாத அளவுக்கு அது தகுதியற்றதாக ஆகிவிட வேண்டும் என்பதற்காக அவர்கள் பொறாமை மற்றும் எரிச்சலின் காரணமாக தம் வீடுகளுடைய சுவர்களையும் கூரைகளையும் இடித்து விட்டு சென்றனர். அவர்கள் மதீனாவை விட்டு புறப்பட்டு செல்லக்கூடிய நிலை எவ்வாறானதாக இருந்தது என்றால், கொண்டாட்டம் மற்றும் ஆரவாரத்துடன் பாடல்கள் பாடப்பட்டு கொண்டிருந்தன; இசைகள் ஒலித்துக் கொண்டிருந்தன. திருமண ஊர்வலம் செல்வதைப்போன்று சென்றார்கள். ஆனால் அவர்களுடைய போர் தளவாடங்கள் மற்றும் அசையா சொத்துக்களாக இருந்த தோட்டங்கள் போன்றவை முஸ்லிம்களின் கைகளில் வந்தன. இந்த செல்வம் போர் நடைபெறாமல் கிடைத்தது. ஆகவே இஸ்லாமிய ஷரீஅத்தின் அடிப்படையில் இதை வினியோகம் செய்வதற்கான முழு அதிகாரம் பெருமானார் (ஸல்) அவர்களுக்கு இருந்தது. பெருமானார் (ஸல்) அவர்கள் இந்த செல்வத்தை பெருமளவில் ஏழை முஹாஜிர்களுக்கு விநியோகம் செய்து கொடுத்து விட்டார்கள். அவர்களுடைய வாழ்வாதாரத்தின் சுமை அப்போது வரை ஆரம்ப கால சகோதர உடன்படிக்கையின் அடிப்படையில் அன்ஸாருடைய சொத்துக்களைச் சார்ந்து இருந்தது. இவ்வாறு மறைமுகமாக அன்ஸாரும் இந்த போர்ச் செல்வத்தில் பங்கு பெறக் கூடியவர்களாக இருந்தார்கள்.

ஹஸ்ரத் முஹம்மது பின் மஸ்லமா (ரலி) என்ற ஒரு சஹாபியின் கண்காணிப்பில் கீழ் பனூ நளீர் மதீனாவில் இருந்து புறப்பட்டுக் கொண்டிருந்தார்கள். அப்பொழுது சில அன்ஸார் தம்முடைய சந்ததிகளாக இருந்தவர்களை அவர்களுடன் செல்ல விடாமல் தடுக்க விரும்பினர். ஆனால் அன்ஸார் நேர்த்திக்கடன் வைத்ததன் காரணமாக அவர்கள் (அதாவது அன்ஸாருடைய சந்ததிகளில் சிலர்) யூதர்களாக ஆகி இருந்தார்கள். பனூ நளீரோ அவர்களை தம்முடன் அழைத்துச் செல்ல விரும்பினர். ஆனால் அன்ஸாருடைய இந்த கோரிக்கை இஸ்லாமிய கட்டளையான,

لَآ اِكۡرَاهَ فِى الدِّيۡنِ

'மார்க்க விவகாரத்தில் எவ்வித கட்டாயமும் இல்லை' என்பதற்கு எதிராக இருந்தது. ஆகவே பெருமானார் (ஸல்) அவர்கள் முஸ்லிம்களுக்கு எதிராக, யூதர்களுக்கு சாதகமாக தீர்ப்பு வழங்கினார்கள். யூதராக இருக்கக் கூடியவர் செல்ல விரும்புகிறார் என்றால் நாம் அவரைத் தடுக்க மாட்டோம் என்று கூறி விட்டார்கள். ஆயினும் பனூ நளீரிலிருந்து இரு நபர்கள் மனமுவந்து முஸ்லிம்களாக ஆகி மதீனாவில் இருந்து விட்டார்கள்.

பெருமானார் (ஸல்) அவர்கள் பனூ நளீர் தொடர்பாக அவர்கள் சிரியாவின் பக்கம் செல்ல வேண்டும் என்று தீர்ப்பு வழங்கினார்கள் என்றும் ஓர் அறிவிப்பில் வருகிறது. அதாவது அரேபியாவில் இருக்க வேண்டாம் என்பதாகும். ஆனால் அவ்வாறிருந்தும் அவர்களுடைய சில தலைவர்கள், உதாரணமாக சலாம் பின் அபீ ஹுகைக், கினானா பின்

ரபீஃ மற்றும் ஹுயய் பின் அக்தப் ஆகியோரும், பொதுமக்களில் ஒரு பிரிவினரும் ஹிஜாஸ் உடைய வடக்கு பகுதியில் யூதர்களுடைய பிரபல்யமான குடியிருப்பாக இருந்த கைபருக்கு சென்று விட்டார்கள். கைபர்வாசிகள் இவர்களை பெரும் நல்வரவு கூறி வரவேற்றார்கள். இறுதியில் இவர்கள் முஸ்லிம்களுக்கு எதிராக அபாயகரமான குழப்பத்தை ஏற்படுத்துவதற்கும், போரை மூட்டுவதற்கும் காரணமாக ஆனார்கள்.

பனூ நளீருடன் போருக்கான சூழ்நிலையே அமையவில்லை. மாறாக அல்லாஹ் தன் நபியுடைய அச்சத்தையும், ஆளுமையையும் அவர்களின் உள்ளங்களில் ஏற்படுத்தி விட்டான். இவ்வாறு அல்லாஹ் அவர்களின் செல்வங்களுக்கு தன் தூதரை வாரிசாக ஆக்கிவிட்டான்.

**அன்ஸாருடைய ஏக்கம் கொள்ளத்தக்க வியத்தகு நேசம் மற்றும் தியாகத்தின் முன்மாதிரியும் இங்கு நமக்கு காணக் கிடைக்கிறது.** பெருமானார் (ஸல்) அவர்கள் செல்வத்தை விநியோகம் செய்யும்போது ஹஸ்ரத் ஸாபித் பின் கைஸ் பின் ஷமாஸ் (ரலி) அவர்களிடம், எமக்கு முன்னால் உங்கள் சமுதாயத்தை ஒன்று திரட்டுங்கள்; அனைத்து அன்ஸாரையும் அழையுங்கள் என்று கூறினார்கள். ஆகவே அவர்கள் அவ்ஸ் மற்றும் கஸ்ரஜ் கோத்திரத்தாரை அழைத்தார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள் முஹாஜிர்களுடன் அன்ஸார் அழகிய முறையில் நடந்து கொண்டதைப் பற்றி எடுத்துரைத்தவாறு அன்ஸாரிடம், நீங்கள் விரும்பினால் பனூ நளீரிடமிருந்து கிடைத்த ஃபய் செல்வத்தை உங்களுக்கும் முஹாஜிர்களுக்கும் இடையில் வினியோகம் செய்து விடுகிறேன். அந்நிலையில் முஹாஜிர்கள் உங்களது வீடுகளை ஆக்கிரமித்தவர்களாகவும், உங்களது செல்வங்களுக்கு எஜமானர்களாகவும் இருப்பார்கள். உங்களுக்கு விருப்பமிருந்தால் ஃபய் செல்வத்தை முஹாஜிர்களிடத்தில் நான் விநியோகம் செய்து விடுவேன். அந்நிலையில் உங்களால் வழங்கப்பட்ட வீடுகளை விட்டு அவர்கள் வெளியேறி விடுவார்கள் என்று கூறினார்கள். அப்போது ஹஸ்ரத் சஅது பின் உபாதா (ரலி) மற்றும் ஹஸ்ரத் சஅது பின் முஆஸ் (ரலி) ஆகியோர், எங்களுடைய செல்வங்கள் அவர்களிடத்திலே இருக்குமாறு விட்டு விடுங்கள். பனூ நளீருடைய அனைத்து செல்வங்களையும் எங்களுடைய முஹாஜிர் சகோதரர்களுக்கு விநியோகம் செய்து விடுங்கள் என்று கூறினார்கள்.

அப்போது, ‘அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! நாங்கள் இதில் மகிழ்ச்சி அடைகிறோம்; நாங்கள் இதை ஒப்புக்கொள்கிறோம்’ என்ற ஓசை நாலாபுறமிருந்தும் (அன்ஸார் சார்பாக) எழுவதை முஹாஜிர்கள் கேட்டார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள் இந்த தியாக உணர்வைக் கண்டு மிகவும் மகிழ்ச்சி அடைந்தார்கள். ‘அல்லாஹ்வே அன்ஸார் மீதும் அவர்களுடைய சந்ததிகள் மீதும் கருணை காட்டுவாயாக’ என்று கூறினார்கள்.

இங்கு பனூ நளீர் போரைப் பற்றிய குறிப்பு நிறைவு பெறுகிறது. இனி வரக்கூடிய காலத்தில் மற்ற போர்களைப் பற்றிய குறிப்பு எடுத்துக் கூறப்படும் இன்ஷா அல்லாஹ்!

*குத்பாவின் இறுதியில் ஹுஸூர் அவர்கள் பாகிஸ்தான் அஹ்மதிகளுக்காகவும், பாகிஸ்தானுடைய பொது அமைதிக்காகவும், உலகில் உள்ள அனைத்து முஸ்லிம்களுக்காகவும், உலகின் பொதுவான சூழ்நிலைக்காகவும் துஆவுக்காக கவனமூட்டினார்கள்.*

اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ اَعْمَالِنَا مَنْ يَّهْدِهِ اللّٰهُ فَلَا مُضِلَّ لَهٗ وَمَنْ يُّضْلِلْهُ

فَلَا هَادِىَ لَهٗ وَنَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ، عِبَادَ اللّٰهِ رَحِمَكُمُ اللّٰهُ اِنَّ اللّٰهَ يَأْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِيْتَآءِ ذِى الْقُرْبٰى وَيَنْهٰى عَنِ

الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْىِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ اُذْكُرُوا اللّٰهَ يَذْكُرْكُمْ وَادْعُوْهُ يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللّٰهِ اَكْبَرُ۔

**(தமிழாக்கம்: மவ்லவி A.P.A. தாரிக் அஹமது)**